"மேற்கொள்ளப்படும்" என்றனர்.




▲ கோவையில் நடைபெற்ற சர்வதேச தசை சிதைவு நோய் விழிப்புணர்வு தின நிகழ்ச்சியில் பங்கேற்றோர்.

# சர்வதேச தசை சிதைவு நோய் விழிப்புணர்வு நிகழ்ச்சி

■ கோவை

சர்வதேச தசை சிதைவு நோய் விழிப்புணர்வு நிகழ்ச்சி கோவையில் நடைபெற்றது.

தசை சிதைவு நோய் என்பது தசைநார் இழப்பு மற்றும் வலிமையின் இழப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது.

இந்த நோய் 5 ஆயிரம் ஆண்களில் ஒருவரைப் பாதிக்க வாய்ப்புள்ளது. மிகவும் பொதுவான வகை 'டுச்சென்' தசை சிதைவு நோய், இளம் சிறுவர்களை அதிகம் பாதிக்கிறது. மற்ற வகை தசை சிதைவு நோய்கள், வயது முதிர்ச்சியடையும்போது ஏற்படுகின்றன.

இந்த நோய் ஏற்பட மரபணு முக்கியக் காரணமாகும். இந்நோயை பூரணமாக குணப்படுத்த சிகிச்சை இல்லை என்றாலும், சில உடல் இயக்க சிகிச்சைகள் (பிசியோதெரபி) உள்ளிட்ட சிகிச்சைகள் மூலம் நோயின் தாக்கத்தைக் குறைக்கலாம்.

மரபணு மூலக்கூறு பரிசோதனை, கலந்தாய்வு, சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி அமைப்பு சார்பில் கோவையில் சர்வதேச தசை சிதைவு நோய் விழிப்புணர்வு தினம் அனுசரிக்கப்பட்டது. இதில், தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட 100-க்கும் மேற்பட்ட குழந்தைகள் பங்கேற்றனர். இந்திய அரிய வகை நோய்கள் அமைப்பின் தலைவர் பிரசன்ன குமார் தலைமை வகித்தார். இயற்கை சிகிச்சை நிபுணர் சுப்பிரமணியம், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

மரபணு மூலக்கூறு பரிசோதனை, கலந்தாய்வு, சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி அமைப்பு நிர்வாகி டாக்டர் லட்சுமி, தசை சிதைவு நோய் குறித்து விளக்கினார். அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "ஒவ்வொர் ஆண்டும் உலகம் முழுவதும் 3 ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட ஆண் குழந்தைகளுக்கு, தசை சிதைவு நோய் ஏற்படுவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. தமிழகத்தில் இந்நோய் பாதித்த குழந்தைகள் அதிகம் உள்ளனர். இந்த நோய் மரபுவழி ஏற்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். ஆண் குழந்தைகளை மட்டும் தாக்கும் இந்நோய்க்கு இதுவரை மருந்து கண்டறியப்படவில்லை" என்றார்.

THE HINDU (தமிழ்)
14-09-2019